Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

**CrlMP No. 1484/2024**

Depositions of -வேல்ராஜ் ..witness for ...Petitionber Side Witness -1

| | | |
|---|---|---|
| Name | - வேல்ராஜ் (PW- 1 ) |
| Father's and Husband's name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14.03.2024.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை-**

நான் போடி சுந்தரராஜபுரத்தில் குடியிருந்து, மக்காசோளதட்டை குழி கணக்கில் விலைக்கு வாங்கி கேராளாவிற்கு அனுப்பி வைத்து தொழில் செய்து வருகிறேன். கேரளாயை சேர்ந்த குத்தடி என்ற ஊரில் இருந்து அமல்ராஜ் என்ற நபர் என்னிடம் லோடு மேனாக வேலைக்கு வந்தார். போடி பத்ரகாளிபுரத்தை சேர்ந்த காளிராஜ் என்ற நபரும், அமல்ராஜ் என்ற நபரும் சேர்ந்து , எனது தொழிலில் நஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்று மோசடி செய்து ரூ.3 லட்சம் வரை காலி செய்து விட்டார்கள். நான் பத்து வருடங்களாக தொழில் செய்து வந்தேன். மேற்படி நான் மக்காசோளதட்டை விநியோகம் செய்து வசூல் செய்த பணத்தை 2 லட்சம் ரூபாய்

வரை எனக்கு கொடுக்காமல் அமல்ராஜ் என்ற நபர் என்னை ஏமாற்றி விட்டார். ஒருவார காலம் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது கேரளாவில் நான் மக்காசோளதட்டை விநியோகம் செய்யும் நபர்களிடம் என்னை பற்றி இல்லாததததும், பொல்லாததும் சொல்லி , நான் இனிமேல் விநியோகம் செய்ய வரமாட்டேன் என்றுசொல்லி விட்டார்கள். அதனால் எனக்கு பத்து விவசாயிகளுக்கு மக்காசோளதட்டை வாங்கியதற்கான பணம் ரூ.3 லட்சம் வாங்கியது நின்று போய்விட்டது. அமல்ராஜ் என்ற நபர் எனக்கு லோன் வாங்கி தருவதாக சொல்லி, ஆதார்கார்டு நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், அசல் செக் ஸ்லிப் -5 பிளைன் செக்குகள் ஆகியவற்றை பெற்றுக்கொண்டு, லோன் வாங்கி தராமல் ஏமாற்றி விட்டார். மேற்படி அமல்ராஜ் என்பவரின் வீட்டுப்பத்திரத்தை வாங்கி லெட்சுமி விலாஸ் வங்கியில் 4 லட்சம் ரூபாய் லோன் வாங்கி அமல்ராஜை ஏமாற்றி விட்டதாக கூறி எனக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். நான் தற்போது தொழிலும் செய்யமுடியாமல், தலைமறைவாக உள்ளேன். மேற்படி சோளதட்டை கொடுத்த உரிமையாளர்கள் என்னிடம் பணம் கேட்டு, என்னையும் , எனது குடும்பத்தினரையும் அசிங்கமாக பேசி தொந்தரவு செய்து வருகிறார்கள். சில்லமரத்துப்பட்டியை சேர்ந்த தவமணி என்பவர் வண்டியை மறித்து என்னை அடித்துவிட்டார்கள். எரணம்பட்டியில் இருந்து வந்து செல்வகுமார் என்பவர் நான்கு நபர்களை அழைத்து வந்து எனது மனைவியிடம் உனக்கும், உனது கணவருக்கும் சம்பந்தமில்லை என்று எழுதிக்கொடு நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று பிரச்சனை செய்து வருகிறார்கள். அமல்ராஜ் என்பவர் என்னை ஏமாற்றிவிட்டார். என்னால் அவர்களுக்கு பணத்தை திருப்பி தரமுடியவில்லை. வீட்டில் குடியிருக்க முடியவில்லை, கோட்டூரில் இருந்து பத்மா என்பவர் என் மனைவியை கொடூரமாக பேசி வருகிறார்கள். ராசிங்காபுரம் இயற்கை தோட்ட உரிமையாளர் சசி என்பவர் இந்நீதிமன்றத்திற்குள்ளேயே நான் இன்று விசாரணைக்கு வந்தபோது என்னை மிரட்டி சென்றார்கள். 20 ந்தேதி, 2 , 3 மாதங்களுக்கு முன்பு தாலுகா காவல்நிலையம் சென்று புகார்

கொடுத்தேன். மேற்படி புகாரின் பேரில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பின்னர் 23 ந் தேதி எஸ்.பி. அலுவலகம் சென்று புகார் கொடுத்தேன். அதன் பேரிலும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் தனிப்புகாரை தாக்கல் செய்தேன்.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K
VELUMAYIL

Digitally signed by
G K VELUMAYIL
Date: 2024.03.21
15:57:51 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.